ஸ்ரீ

# திருவள்ளுவர்

இது

சென்னை வண்ணையம்பதி ஸ்ரீ கஜவரதராஜ பெருமாள்

சந்நிதான ஸ்வாதீன தர்மகர்த்தர்

ஸ்ரீமத் ஸ்ரீ பூ அரியபுத்திர தாஸரவர்களின் புதல்வர்

பண்டித ஸ்ரீ.

பூ. அ. கோவிந்தராஜ தாஸரவர்களால்

இயற்றப்பட்டு

சென்னை திருவள்ளுவர் [illegible] கழகத்தின்

போஷகரும்,

சென்னை ஆதி திராவிட மகாஜன சபைத்

தலைவரும், போஷகருமான

உயர்திருவாளர். அ. முருகேசம் பிள்ளை

அவர்களின் பொருளுதவியால்

சென்னை ஏழுகிணற்றுவீதி

சந்த்ரதேவ் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை 1929. 0-2-6

# முகவுரை.

திருமகளார் தனிக் கேள்வன் வீற்றிருக்கை யாகிய திருவேங்கட மலையை வடவெல்லையாக வுடைய தமிழ்த் தேசத்தில் பன்னூற்றாண்டுகளாக ஸ்ரீ அகத்தியனார் முதற் பல முனிவர்களும் புலவர்களுஞ் செந்தமிழ்ச் சங்கமிருந் தாராய்ந்தும், வைதிகம் பௌத்தம் முதலிய பல மதங்கள் பரவியும் தமிழ் மக்கட்கு ஜாதிபேத மென்னும் புன் புலால் நாற்ற மின்றியதும் உண்மையுந் நன்மையும் எண்மையுமான நெறியிது வென்றறிதற் கரிதா யிருந்தமையான், அருட்பெரும் வள்ளலாகிய இறைவன்

'குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்'

என்னும் பொய்யாமொழியின்படி சுமார் ஆயிரத் தெண்ணூற்றைம்பது வருடங்கட்கு முன் பாண்டி மண்டலத்தில் உத்தர மதுரை நகர்க்கண்

* திருநாள் படைநாள் கடிநாள் என்றிப,
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச் சேனை வள்ளுவ

குலத்தவர்களான ○ ஆதிதிராவிடர் தோன்றலாய் தவசிரேட்டரா யிருந்த கச்சனார் என்பாருக்கும் உபகேசி யென்னும் அம்மையாருக்கும் புதல்வராய்த் தோன்றி

திருவள்ளுவர் முதலிய திருநாமங்களைப் படைத்து துறவு நிலை யுடையவராய் தமிழ்ப் பெருங் கவிஞராய் தமிழ்ப் பெரும் புலவர்களால் வினையின் நீங்கியா ரென்றும் விளங்கிய அறிவினை யுடையா ரென்றும் முனைவர் என்றும் பிறர்பால் ஓதாது யாவுங் கற்றறிந்தவர் என்றும் சர்வஞ்ஞர் என்றும் குற்ற மற்றவர் என்றும் மக்கண்மாட்டு நிறைந்த அன்புடையவர் என்றும், பெரும்புகழுடையவர் என்றும், ஜாதி சமயச் சண்டை யற்றவ ரென்றும், சத்தியவாக் குடையவரென்றும், வேண்டிய வேண்டியாங் களிக்கும் இயல் புடையவர் என்றும், புகழப் பெற்றவராய் முதறங் கண்ட முனிவராய் வீற்றிருந்து திருக்குறள் என்னுந் தமிழ்த் தெய்வ மறையை யருளி தமிழ்மக்க ளனைவ

* பெருங்கதை ○ 'முரசு கடிப்பிடூஉ முதுகுடிப் பிறந்தோன்' என்னும் மணிமேகலைப் பிரயோகத்தை யூன்றி நோக்குக.

ரும் இறும்பூ தெய்த சங்கப் புலவர்களின்முன் அரங்கேற்றஞ் செ தமிழுலகை வாழ்வித் தருளினர் எனபது இச்சிறு நூலில் வெளிப்படும் திருவள்ளுவர் சரித்திரச் சுருக்கமாம்.

சில வாண்டுகளாகத் தமிழ்ப் புலவர்களிற் பலர் தங்கள் தமிழறிவைக்கொண்டு திருவள்ளுவனார் திவ்விய சரித்திரத்தை ஆராய்தலிற் றலையிட்டுத் தங்கடங்கட்குத் தோன்றிய கருத்துக்களைப் பிரசங்க வாயிலாகவும் பத்திரிகை வாயிலாகவும் வெளியிட்டு வருவதன்றி நூல்வடிவாகப் பிரசுரிப்பதிலும் முந்துபவர்களா யிருக்கின்றன ரென்பது யாவரும் அறிந்த தொன்றே. அவர்களின் கருத்துக்களிற் சில எனது சிற்றறிவாற் செய்த ஆராய்ச்சிக்குப் பொருந்தாமையால்

யான் சென்ற 30-1-27ல் நடந்தேறிய எனது குருநாதர்- வேதாந்த வித்வ சிரோமணி- ஸ்ரீமத் நாராயண தேசிக ரவர்களின் பதினாறாவது வருடத்து குருபூஜா மஹோத்சவத்தில் ஆசிரியர்- கோ. வடிவேலு செட்டியா ரவர்கள் தலைமையில் திருவள்ளுவர் என்றும் விஷயத்தைப்பற்றி நிகழ்த்திய பேருரையைத் தலைவரவர்களின் மதிப்புரையுடன் நூல் வடிவாக வெளியிட்டனன். ஜாதி மத துவேஷ மின்றி நணெருக்கத்துடன் தமிழ் மக்கட் சரித்திரத்தை யறிய விரும்பும் அன்பர்கள் இதனைப் பிறர்கருத்தோடு ஒத்திட்டுப் பார்த்து ஏற்பன வற்றைக் கொண்டு உண்மை தெளிய வேண்டுகிறேன்.

இதனை அச்சிடுதற்குப் பொருளுதவி பெரியார் ஆதிதிராவிட மரபிற் றோன்றிய வள்ளலெனப் புலவர்களாற் புகழ்ப்பெற்றவரும சிதம்பரம் நந்தனார் கல்விக்கழகத்தற்கு மூலகாரணரும் சென்னை ஆதிதிராவிட மகாஜன சபைத் தலைவரும் போஷகரும் திருப்போரூர் திருவள்ளுவர் சத்திர பிரதம முதன்மைக்காரரும் எனது தமையனாரு மாகிய உயர்திருவாளர் அ. முருகேசம் பிள்ளையவர். கைம்மாறு வேண்டாமல் செய்யாமற் செய்த இப்பெருந்தகையாரது உதவிக்கு யான் என்றுங் கடப்பாடுடையே னாயினேன்.

பூ. அ. கோவிந்தராஜன்.

சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்துப்

பொதுக் காரிய தரிசியர்

**ஸ்ரீலஸ்ரீ- சகஜாநந்த ஸ்வாமிகள் M. L. C.**

கூறிய

## அபிப்பிராயம்.

தமிழ் மொழியில் ஆற்றலும் நுண்ணறிவும் பெற்ற அறிஞ ரனைவரும் பழந்தமிழ் மறையா (ஆதிதிராவிட வேதமா) கிய திருக்குறளை யோதுவதிலும் அதன் ஆசிரிய ராகிய திருவள்ளுவர் வரலாற்றையும் சமய உண்மையை யும் ஆராய்வதிலும் தலைப்பட்டவராகின்றனர். அவ்வா ராய்ந்தோரிற் பலர் தத்தம் ஆராய்ச்சியிற் கண்ட பொ ருள்களை வெளியிட்டனர். இவர்களுள் பண்டித ஸ்ரீ. பூ. அ. கோவிந்தராஜ தாஸரும் ஒருவர். இவர், நீறுபூத்த நெருப்பென்ன மிளிரும் உயர் ஞானியாராகிய ஸ்ரீமத். பூ. அரிய புத்திரதாஸ சுவாமிகளின் திருக்குமாரரும் பொதிகைமலைச் சித்தர் மரபு வேதாந்த வித்வசிரோமணி-ஸ்ரீலஸ்ரீ நாராயண தேசிகரின் மாணவரும், வித்வான். ச. சின்னப் பாவு முதலியாரிடம் தமிழ்க்கலை பயின்றவரும் எனது ஆப்த நண்பர்களி லொருவருமாவர்.

இவர் தம்மால் நிகழ்த்தப் பெற்ற திருவள்ளுவர் என்னுஞ் சொற்பெருக்கைப் படித்துப் பார்த்தேன் இச் சொற்பெருக்கில், மக்களை யேமாற்றுதற்கெழுந்த கபிலர் அகவலின் திருவள்ளுவர் வரலாற்றை மறுத்திருப்பதும், அருந்தவமுனிவன் பகவன்என்பதற்கும் கருவூர்ப் புலைச்சி ஆதியென்பதற்கும்உண்மைப்பொருள் பகர்ந்திருப்பதும், திருவள்ளுவரை யேனையோர் தத்தம் குலத்தின ரெனக் கூறிக்கொள்ளுதற்கு மிகவும் வலிந்து பொருள் கொண்டு இடர்ப்படுவதைக் கண்டித்து உண்மையை காட்டி யிருப்

பதும், அவரது சமயத்தை ஆராய்ந்து அறிந்திருப்பதும் போற்றுதற் குரியதேயாம்.

திருவள்ளுவர் உத்தர மதுரைக் கச்சனுருக்கும் உபகேசி அம்மையாருக்கும் மதுரைப் பதியிற் பிறந்தவரென்பது இவரது ஆராய்ச்சியிற்றான் முதன்முதலாகக் காண்கின்றேன். இதற்கு நல்கூர் வேள்வியார் கவியின் இவரது புத்துரையே யன்றி வேறு பிரமாண மொன்றெனினும் ஆராய்ச்சி யாளர்க்கு ஒருவிருந்தாகமிளிர்வதாம் திருவள்ளுவர் வடமொழி நூற்பயிற்சி யுடையவ ரன்றென்பது ஆராய்ந்தறிந்துக் கோடற் குரியதாம். பொதுவாகப் பண்டிதரவர்களின் சொற்பெருக்கில் தமிழ்ப் புலவர்கள் ஆராய்ந்து தெளிதற்குரிய பல பொருள்கள் உள்ளன வென்பது தேற்றம்.

இந்நூல் ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்கும் அவர்களின் முன்னேற்றத்தைக்கருதி யுழைப்பான் வெள்ளந்த சான்றோர்கட்கும் புலவர்கட்கும் பேருதவியா மென்பது எனது அபிப்பிராயம்.

---

சித்த வைத்திய நிபுணரும்,
சமரச ஞான பானுவு மாகிய
மறைத்திருவள்-ஷண்முகானந்த ஸ்வாமிகளின்
மாணாக்கருள் ஒருவராகிய
டாக்டர் P. R. S. பதி அவர்கள் கூறிய

## அபிப்பிராயம்.

தமிழ் மறையென்று எச்சமயத்தினரும் வணங்கிப் போற்றுதற்குரிய திருக்குறளை யருளிச்செய்த ஆசிரியர் திருவள்ளுவரின் வரலாற்றைப் புலவர்பலர் எழுதியும் பேசியும் வருகின்றனர். அவையாவும் நூலளவைக்கும் யுக்தி அநுபவங்கட்கும் ஒவ்வாதனவாய்க் காணப்படுகின்

றனை. பண்டிதஸ்ரீ பூ. ஆ. கோவிந்தராஜ தாஸ் அவர்
கள் எழுதிய திருவள்ளுவர் என்னும் நூலைப்படித்துப்
பார்த்தேன். இதில் ஆராய்ச்சியாற் கூறப்படும் ஆசிரியரின்
குலம் பெற்றோர் முதலிய விஷயங்கள் ஆராய்ச்சியாளர்
கள் போற்றுதற்குரியனவேயாம். திருவள்ளுவ மாலையின்
கவிஞர் வெளியிட்டார் செய்யுட்கு இவரது அரியவுரையை
நூற்பிரமாணமாகவும் ஆசிரியர்க்குச் சிறப்பாயமைந்ததொ
ரு கோவிலும் விழாக்களும் இல்லாமையுக்திக்கும், திருவள்
ளுவர் என்னும் பெயருமே திருமயிலை முண்டைக் கண்ணை
யம்மன் கோவில் சேரியில் இருக்கும் திருவள்ளுவர் கோயி
லும் அநுபவத்திற்கும், முத்திருப்பதால் ஆசிரியர் பார்ப்ப
னரென்பதும் வள்ளுவசாதியினரே யென்பதும் நிச்ச
யமாகின்றன. இந்நூல் தமிழ்நாட்டுப்பெரியார் ஈ. வே.
இராமசாமியாரின் தலைமையில் பரவிவரும் சுயமரியாதை
இயக்கத்தின் கருத்துக் கிசைந்தபடி நூலணிந்த பார்ப்ப
னர்க்கே நாட்டபுத்தியுண்டென்று ஒலமிடும் வைதிகவா
னரை ஊமராக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இது சுயமரி
யாதையை விரும்பும் ஒவ்வொருவரும் பொன்னே போற்
போற்றத்தக்கதாம், சுயமரியாதை வீரருக்கிட்டதோ
ரிய விருந்துமாகும்.

## சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியரின் தலைமை மாணவர்
திருவாளர். தி. முநிசாமி நாயகரவர்களியற்றிய

### நிலமண்டில ஆசிரியப்பா.

சந்தனப் பொதிகைத் தனிவரைச் சான்றோன்
செந்தமி ழகத்தியன் றிருமர புவந்தோன்
தன்னையல தயமிலை தானே யெவைப்பு
நினைவற நோக்கெனு நிறைமொழி மையயன்
பார்ப்பனர்ச் செருக்கைப் பறக்க வோட்டி
யார்க்குநற் போத மொழிதி னருளும்
வீரவே தாந்த வித்வசிரோமணி
நாரண தேசிக நாதன் விழாகாட்டு
கொட்டியன் மொழியார் கோ. வடி வேலுச்
செட்டியார் தமது சீர்தலை மைக்கீழ்

விரிவுரை தந்த வித்துவக் குழுவின்
பெரியார் பலர்முன் பிறியா நலந்தரூஉந்
திருத்தமிழ் மறைசெய் தெய்வப் புலமை
திருவள் ளுவனார் தெள்ளிய கொள்கை
குலநிலை யுரைப்போர் குறைமதி யகற்றி
யுலகம் புகழ வுண்மையை நாட்டினன்
தருமந் திரண்ட தநுவொடு வந்து
திருமக ளீந்த செல்வப் பேற்றினை
வரையா தளிக்கும் வண்மையே புனைந்து
தஸ்ரப்பா இளசுகந் தரித்தில தோர்ந்து
நிஜசுக மணைவா னிலை மதனிற்
கஜவர தப்போர்க் கடவுளர்க் கன்பராய்த்
துறவற மின்றித் தூய்ஞான மிணைநெறிப்
புறமொழி கூறும் புலவர்க ணாணச்
செல்வது கருதாச் சேர்வது நினையா
வில்லற ஞான வேந்தலாய் நாளுஞ்
சகஜா நந்தத் தனிமையி லுறைவோன்
புகலரு மரிய புத்திர தாஸர்
செய்தவப் பயனாய்த் திங்களிற் றோன்றி
வையகம் போற்ற மகன்றந்தைக் காற்று
முதவியைக் காத்த வுத்தம னென்றோர்
சதமெனக் கண்ட தமிழ்மறை விநோதன்
கல்வியின் மணமோர் கடுகள வுமிலாப்
புல்லறி வோனென் புந்தியைத் திருத்திக்
தமிழ்க்கலை யறிவைத் தந்துமெய்ப் பொருட்சே
ரிமிழுறு பவத்தி லிருத்திவாழ் வருள்வான
தத்துவ. மசியின் றனிநிலை காட்டி
யுத்தம தோட்டிய மாபண் டிதஸ்ரீ
கோவிந்த ராஜ குருமணி கலைதேர்
நாவினாற் சொற்ற நலவிரி வுரையால்
தலைவரு மார்வுற சபைநிறை யறிவோர்
தலையசைத் துவப்பத் தனிந்தென் னையும்
வடவேங் கடத்தென் னிதையா யிடைநிலம்
மடநனி யிகக்கு மாண்பயன் பெற்றதே.

மேலைக்குண்டையார் மடாதிபதி

வேதாந்தபாரு ஸ்ரீலஸ்ரீ ஜெயராமஸ்வாமிகள்

மாணாக்கரி லொருவராகிய

## ஸ்ரீமான். வேதகிரி முதலியார்

அவர்களா லியற்றப்பட்ட

நிலமண்டில ஆசிரியப்பா.

கடல்புடை சூழுங் காசினி தன்னில்
திடமுளோர் வாழுஞ் சென்னையம் பதியில்
அறம்பொரு ளின்ப மயரிலா வீட்டைத்
திறமுட னுரைத்திய தேசிக நாரணா
குருபகா பூசையிற் கூடிய சபையிற்
றருக்க வேதாந்த சவிதா வென்ற
வடிவேலு செட்டி மகாதலை மைக்கீழ்ப்
படிபுகழ் வள்ளுவர் பாயிரம் விளம்பிய
துரியைக் கேட்டுக் குற்ற மில்லா
தெரியீ தென்றே நானின் றறிந்தேன்
ஆயிரத் தெண்ணூற் றைம்பதா மாண்டுமுன்
வாயி லோங்கிய மதுரைமா நகரில்
உத்தர மதுரை யுயர்கச் சனரின்
பத்தியிற் சிறந்த பணபுள வுபகேசி
யிருவரு மியற்றிய வினையிலா தவமே
புருஷ வுருவொடு புனிதன் றோன்றினன்
அவதார மூர்த்தி யாகிய வண்ணல்
தவறிலா தான தரும முடையோன்
தெய்வப் புலவன் தேசிக சிகாமணி
பொய்மொழி புகலா புனித தவத்தோன்
வினையி னீங்கி விளங்கிய வறிவன்
தனைநிக ரில்லாத தகையில் மிக்கோன்

மூசுத லில்லா மூதறங் காண்டவன்
மாசு நீங்கிய வள்ளுவ குலத்தவன்
என்றும் பலநய மெடுத்து விடுத்தனன்
சென்னைமா நகரிற் சிறப்பொடு வாழுங்
கோதில் தாஸ கோவிந்த ராஜ
நீதி பண்டித நிபுணன் மாதோ.

## பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| IIII | 2 | சூரியதே | சூரியனவே |
| VI | 32 | னையும் | னையம் |
| 3 | 20 | ளணிந்தேம் | ளறிந்தேம் |
| 4 | 3 | கருத்து | கருத்தும் |
| 32 | 28 | பற்றின்மை | பற்றின்மையும் |



[illegible]

சென்னை இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியாரவர்களின்

# மதிப்புரை.

சகோதரர்களே! சகோதரிகளே!

திருவள்ளுவர் சரித்திரம் முதலையும் முடிவையுங் கண்டு பிடிக்க முடியாத சக்கரச் சுழற்சியைப் போன்றது. இதைப்பற்றிய விவாதங்கள் பலவுள. இன்று, திருவள்ளுவர் சரித்திரத்தை ஆராய்ச்சியுடன் பிரசங்கித்த பண்டிதஸ்ரீ பூ. அ. கோவிந்தராஜதாஸர் கருத்துக்களில் கொள்ளத்தக்கனவுமுள தள்ளத்தக்கனவுமுள. இறைவனொருவனே சர்வஞ்ஞன் மக்கள சர்வஞ்ஞரல்லராதலால அவர்கள் வாக்கியங்களில கொள்ளத்தக்கனவு முண்டு தள்ளத்தக்கனவுமுண்டு. இந்த யோக்கியதையே எனது வாக்கியங்கட்குமாம்.

பிரசங்கியார், ஆசிரியரை அவதார புருஷரென்கிறார் வேதப்பொருளை விளங்கக் கூறியதாயும் எக்காலத்தும் எத்தேசத்தவர்களும் பொன்போல வைத்துப் போற்றக் கூடியதாயுமுள்ள சிறந்த மறையை யருளினாராதலால் ஆசிரியரைப் புலவர்கள் இறைவன்றன் அவதாரமென்றார்கள்.

ஆசிரியரை வள்ளுவகுலத்தவரென்கிறார் அதற்குப் பல நியாயங்களையுங் காட்டுகிறார் இவர் கூறியபடியே ஆசிரியர் வள்ளுவ குலத்தவர்தான் என்பது கொள்ளத் தக்கதே.

ஆசிரியர் ஆதியென்னும் புலைச்சிக்கும் பகவன் என்னும் முனிவனுக்கும் பிறந்தவரென்னுங் கபிலரகவல் கூற

றைக் கண்டித்து ஆசிரியரின் தாய் தந்தையார் உபகேசி
யம்மையாரும் உத்தர மதுரைக் சச்சனென்பாருமாம் என்
கிறார், பிரசங்கியார் எடுத்துரையிட்ட நல்கூர் வேள்வி
யார் கவியில் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா ஸ்ரீபகவத்கீதையை
யருளிச் செய்து ஆரிய தேசத்தை வாழ்வித்தது போல
திருவள்ளுவர் திருக்குறளை அருளிச்செய்து தமிழ்நாட்
டை வாழ்வித்தருளினா ரென்னுங்கருத்து விளங்குகிறதே
அல்லாமல் வேறில்லை யென்பதெனது கொள்கை. ஆசிரி
யரின் தாய் தந்தையார் ஆதப்புலைச்சியும் பாளிதத்த முனி
வனுமாமென்று சுமார் எழுநூறு வருடங்கட்கு முற்பட்ட
ஞாநாமிர்தம் என்னுஞ் சைவநூல் கூறுகின்றது.

ஆசிரியரை வைதிகமதத்தின ரென்கிறார், நான் அவரை
வைதிக மதத்தில் அத்வைதசித்தாந்தத்தைப் பிரதிபாதிக்
கிற வேதாந்திகளில் முதன்மையானவரென்று அவரருளிய
திருக்குறளினின்றே பலபிரமாணங்களை யெடுத்துக்காட்டி
நிச்சயப்படுத்துவேன்.

ஆசிரியரை வேதத்திலுள்ள யாககருமத்தையும் ஜாதி
பேதத்தையுங் கண்டித்து பழமையான சிறந்த நெறியைக்
கண்டு பிடித்தவ ரென்கிறார். 'அவிசொரிந்தாயிரம் வேட்
டலின் ஒன்றன் உயிர்செகுத் துண்ணாமை நன்று' என்னுந்
திருக்குறளின் இன் உருபு உவமப் பொருளின்கண் வந்த
ஐந்தாம வேற்றுமையாதலால் அது எவன் நூறுவருஷம்
வரையில் வருஷந்தோறும் அசுவமேதயாகஞ்செய்கிறானோ
எவன் சாமளவும் மாமிசத்தை நீக்குகிறானோ இவரிருவ
ருக்கும் புண்ணியபலஞ்சரிதான் என்னும் மநுஸ்மிருதியை
யொத்திருக்கிறது. இவ்வாற்றால் ஆசிரியர் யாக கருமத்
தைக் கண்டித்தவரல்ல ரென்பதெனது கொள்கை.

ஸ்ரீ

# திருவள்ளுவர்.

இது

பொதிகைமலைச்சித்தர்மரபு

வேதாந்த வித்வசிரோமணி

ஸ்ரீமந். நாராயண தேசிகர் அவர்கள்

16-வது வருட குருபூஜா மஹோத்சவத்தில் நிகழ்ந்த

சொற்பெருக்கு.

சபைத்தலைவரவர்கட்கும், சபையோர்கட்கும் என் மனமார்ந்த வந்தனம். என்னையன்புடன் ஆண்டுக்கொண்ட குருநாதன் ஸ்ரீமந். நாராயணதேசிகரின் திருவடித்தாமரைகளையென் சிரததணிந்து திருவள்ளுவர் என்பதைப் பற்றி சொல்லுகிறேன்.

அன்புடையீர்!

சரித்திர ஆராய்ச்சிக்கு ஐதீகங்களும் கர்ணபரம்பரைகளும் நூல்களும் அவற்றின் உரைகளும் பிரமாணங்களாவனவாம், நூல்களான் மறுக்கப்படும் ஐதீகங்களும் கர்ணபரம்பரைகளும் பிரமாணங்களாகா, பிற்காலத்து நூல்கள் எத்துணைச் சிறப்புடையனவாயினும் அவை முற்காலத்து நூல்களால் மறுக்கப்படுமாயின் அவையும் பிரமாணங்களாகா. இதனால், தமிழ்வேதியரான நந்திருவள்ளுவனார் சரித்திர ஆராய்ச்சிக்குப் பண்டைத்தமிழ் நூல்களே பிரமாணங்களாவனவென்று நாம் அறிகிறோம்.

திருவள்ளுவனார் சரித்திரத்திற்குப் பிரமாணங்களாவன: கபிலர் அகவலும், திருவள்ளுவ மாலையும், திருக்

கூறனுமேயாம் அவற்றுள், கபிலர் அகவல் பிற்காலத்து வழக்கியற்சொற்க ளுடையதாதலால் அதனைப் பிற காலத்து நூலாமெனக் கொள்ள விடமுண்டு, அன்றியும அவ்வகவலுள்

'மேல்வகை கீழ்வகை விளங்குவ தொழுக்கால்'
'ஒருவகைச் சாதியாம் மக்கட் பிறப்பு'

எனப் பிறப்பினால் ஜாதி யின்றென்றும்

'பூசுரர்ப் புணர்ந்துப் புலைச்சிய ரீன்ற
பூசுர ராயினோர் பூசுர ரல்லரோ'
'சேற்றிற் பிறந்த செங்கழு நீர்ப்போல'

எனப் பிறப்பினால் ஜாதி யுண்டென்றுங் கூறும் முன்பின் மாணிய வாக்கியங்கள் உண்டாகையால் அது தாழாது மசமூத்த செய்யுட் செய் சங்கத்தமிழிற் கபிலர் வாக்கன்றென்பது சாலப்பொருத்தமுடையதாம்.

இனி, அவ்வகவலுட கூறும் சரித்திரத்தை யாராய் வாம். பகவன் என்னும் அருந்தவ முனிக்கும் கருவூர்ப் பெரும்புலைசசி ஆதி யென்பவளுக்கும் எழுவர் பிறந்தனர். அவர்களில், உப்பை, ஊற்றுக்காட்டு வண்ணார் வீட்டிலும் உறுவை காவிரிப்பூம்பட்டினத்துக் கள்விலைஞர் வீட்டிலும் வள்ளுவர் தொண்டைமண்டலத்து மயிலைப் பறையர் வீட்டிலும் வள்ளி குறவர் வீட்டிலும், அதிகமான் வஞ்சி அதிகன் வீட்டிலும் கபிலர் ஆரூர் அந்தணர் வீட்டிலும் வளர்ந்தனரென்பதே அது கூறும் சரித்திரமாம். கூறியவிச சரித்திரத்தில் புலைசசி ஆதி யென்பவளுக்கும், முனிவன் பகவனுக்கும் உப்பைமுதல் எழுவர் பிறந்தனர் என்பதற்குப் பண்டைத் தமிழ்நூற் பிரமாணங்கிடையா. பிற்கா

லத்ததும் முன்பின் முரணிய விஷயங்க ளுடையதுமான இவ்வகவல் கூறுஞ்சரித்திரத்தை யாதாரமாக்கிக்கொண்டு பலதிறப்படவெழுந்த திருவள்ளுவர் சரித்திரங்கள் பல. அவையாவும் திருவள்ளுவரை அந்தணராக்கவும் வேளாள ராக்கவும் வந்த புலவர் பெருமான்களின் சிருஷ்டியேயாம்.

‘எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு’

என்னும் மறைமொழியைக் கடைப்பிடித்தோர் என்னைச் சினந்து மறுக்காரென்பது எனது கொள்கை.

திருவள்ளுவ மாலையில் முதற்கவி தந்தவர் முக்கட் பெருமான எனக் கல்லாடங் கூறுவதால் திருவள்ளுவ மாலையில் முதலிரண்டுகவிகள் சோக்கப்பட்டன வெனக் காண்கிறோம். ஆயினும் திருவள்ளுவமாலை கல்லாட காலத் திற்குமுற்பட்ட பண்டைத்தமிழ் நூலேயாம். இதனை,

‘எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம்—இழுக்கின்றி
யென்றெவர் செய்தன வெல்லாம் இயம்பின
இன்றிவர் இன்குறள்வெண் பா’

என்னும் நச்சுமனார் செய்யுளும்,

‘அறனறிந்தேம் ஆன்ற பொருளணிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு’

என்னும் கொடிஞாழன் மாணிபூதனார் செய்யுளும்

‘சிந்திநீர்க் கண்டந் தெரிசக்குத் தேனாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர் முப்பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தந்து’

என்னும் மருத்துவன் தாமோதரனார் செய்யுளும் சீத்தலைச் சாத்தன் என்னும் பெயர் சினைப்பெயரொடு வந்த இயற்பெயர் என்ற நச்சினார்க்கினியர் கருத்தை வலியுறுத்துவதன்றி நேமிநாதவுரைக்கண் நல்கூர் வேள்வியார் செய்யுள் எடுத்துக் காட்டாக வந்ததும் வலியுறுத்துகின்றது.

## பெயர்.

திருவள்ளுவர், மாதாநுபங்கி, செந்நாப் போதார், முதற்பாவலர், பெருநாவலர், பொய்யில்புலவர், என்பன ஆசிரியரின் பெயர்களாம். இவற்றுள் திருவள்ளுவர் முதலிய பெயர்கள் காரணப் பெயர்களென்றும் மாதாநுபங்கியென்பது இயற்பெயர் என்றும் சிலர் கூறுகின்றனர். மாதாநுபங்கி யென்பது இயற்பெயராயின் அது ஆசிரியரது குழவிப் பருவத்திருந்த முகப்பொலிவைக்கண்ட பெரியோர்களிட்ட பெயராயிருக்கலாம் அன்றெனின், அது காரணப்பெயரென்பதற்கு யாதொரு தடையும் வேண்டுவதின்று. திருவள்ளுவர் என்பது காரணப்பெயரென் றுரைப்போர் அதற்கு வேதத்திலுள்ள இலைமறை காய்போன்ற விஷயங்களை மக்கட்கெளிதிற் றந்தவர் எனபது பொருளாமென்பர். இதைமறுத்து

'சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு
மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்'

என்னுந் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரச் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியார் 'தெய்வப்புலவன் திருவள்ளுவன்' என்னும் உதாரணங்காட்டி யிருக்கிறபடியால் அது இயற்பெயரேயென்பார் சிலர்.

இவர்களிற் சிலர் இயற்பெயர்க்கும் இடுகுறிப் பெயர்க்கும் உள்ள வேற்றுமையையறியாதவர்களாய்த் திருவள்ளுவர் என்பது வள்ளுவர் என்னுங் குலங்காரணமாக வந்த இயற்பெயரன்றென்கின்றனர். இயற்பெயரெல்லாம் இடுகுறிப் பெயராகவேயிருக்கு மென்னும் நியமமில்லை; குலம் முதலிய காரணங் கருதிய பெயராகவு மிருக்கும். திருவள்ளுவர் என்பது குலங்காரணமாகவந்தபெயரென்பதற்குப் பாணர்குலத்திலவதரித்த ஆழ்வாருக்கு அமைந்த திருப்பாணர் என்னும் இயற்பெயரும் வேளாண் மரபில் சேக்கிழார் குடியிற் பிறந்த அருண்மொழித் தேவர்க்கு வழங்கும் சேக்கிழார் என்னும் இயற்பெயரும் கழார்க்கீரன் எயிற்றியார் என்னும் இயற்பெயருஞ் சான்றுகளாம். நெட்டிமையார், ஐயூர் முடவனார் என்னும் வடிவு காரணமாக வந்த பெயர்களும் கல்லாடனார், இடைக்காடனார் என்னும் ஊர் காரணமாகவந்தபெயர்களும் இயற்பெயராயிருத்தலையுங் காண்க.

## குலம்.

மாமூலனார் "தேவை, மறந்தேயும் வள்ளுவ னென்பானோர்பேதை' எனவும், உக்கிரப்பெருவழுதியார் 'நான்முகத் தோன், தான்மறைந்து வள்ளுவனாய்' எனவும், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் 'வள்ளுவனாகி, அந்தாமரைமேல் அயன்' எனவும் உரைத்தமையான் ஆசிரியர் வள்ளுவக் குலத்தவராம். இவ்வாதாரவைக் கொண்டே கபிலரகவல் ஆசிரியர்

'பறையரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்'

என்றார்போலும். அன்றியும் அவ்வகவலாசியர் அந்தணரேயான கபிலரை 'அந்தணர் வளர்க்க' வளர்ந்தவரென்றும் பாடினியேயான ஔவையைப் 'பாணர் வளர்க்க

வளர்ந்தனள்' என்றும் புதுவது புனைந்துரைத்தது போலப் பறையரேயான ஆசிரியரைப் 'பறையரிடத்தில் வளர்ந்தனர்' என்றுரைத்தனரெனக் கண்டு கொள்க. இதனைப் பறையர் குலத்தவரென்பது வெள்ளிடைமலை போல் விளங்குகின்ற ஞானவெட்டி ஆசிரியர்க்கு வழங்கும் திருவள்ளுவர் என்னும் பெயரும் வலியுறுத்தும்.

திருவள்ளுவர் வள்ளுவக் குலத்தவராயின் அவர் தாழ்ந்த வகுப்பினராம். தாழ்ந்த வகுப்பினரொருவர் யாவராலும் பொன்போல் வைத்துப் போற்றுதற் குரிய திருக்குறளை அருளினரெனல் அசம்பாவிதமாம். தாழ்ந்த வகுப்பினர்க்கு அக்காலத்தில் கல்வி கேள்விகளும் வடமொழிநூற் பயிற்சியும் இருந்திலவென்பார் சிலர். அப்புலவர்கள் ஜாதியபிமானம் என்னும் பெருவியாதியாற் பிடிக்கப்பட்டு அக்காலத்துத தமிழ் நாட்டின் மக்கட் சரித்திரத்தைத் தொடர்ந்தறியும் ஆற்றலில்லாதவராம். பிற்காலத்தில் தாழ்த்தப் பட்டிருக்கும் வகுப்பாருள் பாணர் மரபில் ஔவையார், காக்கைபாடினியார், திருப்பாணர்முதலியோர்களும் குறவர் மரபில் குறமகள் இளவெயினி, குறமகள் குறியெயினி, திருமழிசையார் முதலியோர்களும் வேடர் மரபில் இளவேட்டனார், திருமங்கையார் முதலியோர்களும் பறையர் மரபில் ஞானவெட்டியாசிரியரான திருவள்ளுவரும் பிறரும் பெரும்புலவர்களாய் திகழ்ந்தமையாலும் மேன் முக்குலத்திலும் இழிகுலமான வேளாண் குலத்துத் திருநாவுக்கரசும் ஸ்ரீ சடகோபரும் எண்ணிலாப் புகழ்படைத்த பெரியாராய்விளங்கி அருளிச் செய்த நூல்களை நான்மறை முற்றிய அந்தணர்களும் இரும்பூதெய்தி நான்மறையினுஞ் சிறந்த தமிழ் மறையென்று போற்றுவதாலும் ஆசிரியரை வள்ளுவக்குலத்தவரென் றுரைத்தலிற் பிழையொன்றுமின்றும்.

ஒருசிலர், மாமூலனார் 'தேவை, மறந்தேயும் வள்ளுவ னென்பானோர் பேதை' என இசையறுப்பின் ஒலியால் உரைத்தமையான் வள்ளுவக்குலம் இழிகுலமாமென வாதி டுவர். அது திருவள்ளுவராக அவதாரஞ் செய்தருளிய இறைவனை மனிதனென்றும்,வள்ளுவக்குலத்தவனென்றும் கூறுதல் அறியாமையென் றறிவுறுத்தி இறைவனுக்கும் மனிதனுக்குமுள்ள உயர்வு தாழ்வைக்காட்டவந்த செய்யு ளாம் அன்றிவேறன்று. அன்றியும்,பிரமாணமாக வேற்கத் தக்க பண்டைத்தமிழ்நூல்களில் வள்ளுவரை யிழிகுலத்த வரெனக் காட்டின் அவ்வுரை பொருந்தியதே, அவ்வாறு காட்டக்கூடிய பிரமாணமா லொன்றுமில்லை யாதலால் மாமூலனார் செய்யுளில் வள்ளுவக்குலம் இழிகுலமா மென் னும் பொருள்கொள்ளுதல் பொருத்தமற்றதாம்.

## பெற்றோர்.

கபிலரகவற் கூற்றின்படி ஆசிரியரின் தாய் கருவூர்ப் புலைசசி ஆதியும், தந்தை அருந்தவ முனிவன் பகவனு மாம், இக்கூற்றுக்குப் பண்டைத் தமிழ்நூற் பிரமாணம இன்றெனினும் அது புனைந்துரை வகையாற் கூறப்பட்ட தென யூகிக்க விடமுண்டு. சர்வ ஜகத்காரண பூதனை பகவானுக்கும் உயிர்கட்கும் பிதா புத்திர சம்பந்தம் உண் டென்பதும் பகவான் சர்வ ஜகத்காரண பூதனு,கற்கு ஆதி யாய் (காரணமாய்) இருக்கும் அவனது சக்தியே உயிர்கட் கெல்லாந் தாய் என்பதும் ஆன்றோர்கள் தத்துவ ஆராய்ச் சியின் முடிபாம். இதனானும், ஆசிரியர் தம் முதற்றிருக் குறளில் உலகுக்கு முதல் ஆதிபகவன் என்றதனானும், ஔவைமுதல் எழுவரின் தாய்தந்தையர் இன்னாரென வறி தற்கரிதாயிருந்தலினானும் அவ்வெழுவர்க்குந் தாய் தந் தையர் ஆதியும் பகவனுமாம் எனக் கபிலரகவல் உரைக்

கின்றதுபோலும். பகவானுக்கு மௌனமே வடிவமாதலின் அருந்தவ முனிவன் என்றதும் நிர்விகாரனான பகவானை விகாரப்படுத்தித் தோற்றுவிப்பது அவனது சக்தியேயாதலின் புலைச்சி யென்றதும் பொருந்துமாறறிக. கருவூர் என்றது சர்வ ஜகத்தும் உருத்தரிக்கு மிடமாம். இனி,

'உப்பக்கம் நோக்கி உபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புநற்கூடற் கச்சு'

என்னும் கலகூர் வேள்வியார் செய்யுளில் வரும் உத்தர மதுரையைக் கண்ணனெம்பெருமான் அவதரித்த ஆரிய தேசத்து நகரமாகக் கொண்டிருந்த நிலைமையை யறவொழித்து இறையனார் களவிய லுரைப்பாயிரத்தின்படி கடைச்சங்கம் நடந்த தமிழ்நாட்டு நகரமாக்கொள்ளின், இப்பக்கம் - இவ்விடத்தில, மாதாநுபங்கி - மாதாநுபங்கி யென்னும், மறு இல் புலம் செம் நா போதார்-குற்றமற்ற புலமையையும் செவ்விய மலர் நாவையும் உடைய திருவள்ளுவர், புனல்கூடற்கு-மதுரைமாநகருக்கு, அச்சு-உயிராக விளங்கினர் (ஆதலால), உத்தரமாமதுரை கச்சு-பெருமை தங்கிய உத்தர மதுரைக் கச்சனர் என்பவர், உப்பக்கம் நோக்கி - அரியதவத்தைச்செய்து, உபகேசிதோள் மணந்தான் - உபகேசி யென்னுந்தனது நாயகியைச் சேர்ந்து பெற்ருன், என்ப - என்று சொல்லுவர் அறிந்தோர். என்னும் நேர் உரை கிடைக்கின்றபடியால் ஆசிரியரின் தந்தையார் கச்சனர் என்றும் தாயார் உபகேசி அம்மையார் என்றும் அறியக்கிடத்தலுணர்க. இவ்வுரை

'மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்ருன் கொல்லென்னுஞ் சொல்'

என்னுந் திருக்குறட் கருத்தை யொத்திருத்தலறிக.

## ஊர்.

கபிலரகவல் கூற்றின்படி ஆசிரியர் திருமயிலையின் சேரியில் வளர்ந்தவரென்று தெரிகிறது. இதற்கும் பண்டைத் தமிழ்நூற் பிரமாண மின்றும். எனினும், அக் கூற்று திருமயிலை முண்டைக்கண்ணி யம்மன்கோவில் சேரியிலிருக்கும் திருவள்ளுவ நாயனார் கோவில் பிரமாண மாக வந்தது போலும். இனி, நல்கூர் வேள்வியார் செய்யுட்கு முற்கூறிய உரையை நோக்குவமேல் ஆசிரியர் மதுரைப்பதியிற் பிறந்து வளர்ந்தவரெனத் தோன்றுவ துண்மையாம்.

சிலர், அவரைச் சேரதேசத்திருக்கும், வள்ளுவ நாட்டினரா யிருக்கலா மென்பர். அது பொருந்தாது. வள்ளுவநாடு என்னும் பெயர் மாத்திரத்தினாலேயே ஆசிரியரை வள்ளுவ நாட்டினரென்றுதேருவ தெப்படி? மற்று, அது நாஞ்சில் மலைக்குத்தலைவனும் வரையாது பரிசிலர்க் கீந்தவனும் சேரனிடத்தன்புற்று அவற்குப் படைத்துணையாய் நின்றோனுமாகிய ஒருவள்ளுவ சிற்றரசன் நாடாகவிருக்கலாமெனக் கொள்ளுதல் சிறப்பதறிக.

## காலம்.

சீத்தலை சாத்தனார் தாமியற்றிய மணிமேகலை யென்னும் நூலில் திருக்குறளை யெடுத்தாண்டிருக்கிறபடியால் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனருக்கு முற்பட்டவரென்றோ வன்றி சமகாலத்தவரென்றாவது கொள்ளலாம். சிலப்பதிகாரப் பதிகத்தாலும் மணிமேகலைப் பதிகத்தாலும் இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தனரும் சமகாலத்தவர்களென்பது வெளியாம். சிலப்பதிகாரத்தால் இளங்கோவடிகளின் தமையன் சேரன் செங்குட்டுவனென்னும்

இச்சேரவரசன் காலத்தவன் இலங்கை வேந்தன் கயவாகு வென்றும் தெரிகிறபடியாலும் இலங்கைச் சரித்திரமாகிய மகாவமிசம் என்னும் நூலில் ஆயிரத்தெண்ணூறு வருடங்கட்குமுன் கயவாகு என்னும் வேந்தனொருவனிருந்தானென்று தோன்றுகிறபடியாலும் சீத்தலைச் சாத்தனார் ஆயிரத்தெண்ணூற்று ஐம்பது வருடங்கட்கு முற்பட்டவரென்று ஆராய்ச்சிவல்லுநர் கூறுவதால் ஆசிரியர் காலம் ஆயிரத்தெண்ணூற்று ஐம்பது வருடங்கட்கு முற்பட்டதென்பது துணிபாம்.

## தமிழ் நாட்டின் சமயங்கள்.

மணிமேகலையின் சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட காதை, பரிபாடல் முதலியவற்றை நோக்குமிடத்து ஆசிரியர்காலத்தில் வேதாந்தம் வைணவம் சைவம் பிரமவாதம் வைதிகம் பௌத்தம் சமணம் உலோகாயதம் முதலிய மதவாதிகள் நந்தமிழ்நாட்டில் நிரம்பியிருந்தனரெனவறிகிறோம்.

## தமிழ் மொழியின் நிலை.

ஆசிரியர் காலத்தில் அகத்தியம், தொல்காப்பியம் முதலிய சிறந்த இலக்கண நூல்களும் அகப்பொருள் கூறும் நூல்களும் புறப்பொருள் கூறும் நூல்களும் குறைவின்றி யிருந்தன. இவற்றைப் போலவே தமிழ்ப் பேராசிரியர்களும் நிரம்பி யிருந்தனர்.

## கல்வி.

ஆசிரியர் அவதார புருஷர்களிலொருவர் எனவும் தானே முழுதுணர்ந்தவர் எனவும் ஆன்றோர்கள் கூறுகின்றபடியால் திருஞானசம்பந்தர் ஸ்ரீசடகோபர் முதலிய வவதார புருஷர்கள் ஒருநூலையும் ஓதாமலேயே

யாவும் உணர்ந்தவரென்று கூறும்புராணங்களின்படி ஆசிரியரும் ஒருநூலையும் ஓதாமலேயே யாவும் உணர்ந்துரைத்தவரென்று நாம் கொள்ளலாம். ஆனால், அவர்தாமே 'யாம்மெய்யாக் கண்டவற்றுள்' எனத்தமது பன்னூற்பயிற்சியை யுரைத்தமையாலும் 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப' என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தைத் தமது நூலுள்

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.'

எனத்திருக்குறள் வடிவாக்கி யுரைத்தமையாலும் அவர் நிரம்பக்கற்றவரென்றே புலப்படுகிறார். சிலர், மாதர்கள் தங்களைத் தாங்களே காத்தல் வேண்டும்; அதுவே அவர்களுக்குச் சிறந்த காவலாகும் சிறந்த காவலரைவைத்துப் புறத்தே போகவிடாமல் வீட்டிலேயேநன்றாகக் காத்தாலும் அதனாலவர்கள் காக்கப்படுவதில்லை என்னும் மநு தர்மசாஸ்திரம் ஒன்பதாம் அத்தியாயத்திற் காணப்படும் சுலோகத்தின் பொருளை

'சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.'

எனத்தமது நூலுட் கூறுகின்றபடியாலும் பிறவாற்றாலும் ஆசிரியர் வடநூற்பயிற்சியு முடையாரென வுரைக்கின்றனர். அது பொருத்தமற்றதாம். ஒரேபாஷையைத் தெரிந்த ஒருபெரியாரின் வாக்கியப்பொருள்வேறு ஒரேபாஷையைத்தெரிந்த வேறொரு பெரியாரின் வாக்கியத்திலும் வருதலால் ஒரு பாஷை நூற்பொருள் பிறபாஷை நூலின்கண் வருதல் மொழிபெயர்ப்பானேயே ஆம் என்னும் நியமம் இல்லை

பென அறிக. உதாரணமாக 'தந்தை தாய்ப்பேண்' என்னும் வாக்கியப்பொருள் 'உன்தாயையுந் தந்தையையுங் கனம் பண்ணுவாயாக' என்னும் பைபிள் வாக்கியத்தில வேறொருருவடிவோடு வந்ததறிக. அன்றியும், ஆசிரியர் வடமொழி நூற் பயிற்சியுடையவரா யிருந்திருப்பின் அவரருளிய திருக்குறளில் வடமொழி ஆக்கப்பெயர்களும் மொழிபெயர்ப்புச் சொற்களும் மிகுதியாகக் காணப்படல் வேண்டும். இதற்குச் சிந்தாமணியும் மணிமேகலையும் உதாரணங்களாம். அவ்வாறன்றியவை விரல்விட் டெண்ணக் கூடியஅவ்வளவின வாகவே யிருக்கின்றன. ஆதலால் ஆசிரியர் வடமொழிநூற் பயிற்சியுடையவரன்றென வறிக.

## நிலை.

ஆசிரிரிய தொண்டை மண்டலத்துக் காவேரிப் பாக்கம்— மார்க்க சகாயன் என்னும் வேளாளன் புதல்வியாராகிய வாசுகியம்மையாரை மணந்து திருமயிலையில் உலகத்தவர்க்கு இல்லறம் நடத்திக் காட்டியவரென்றும், அவர்தமது வாணாளையங்ஙனங் கழிக்க மக்கள் செய் தொழில் பலவற்றுள் நெய்தொழிலே பாவமற்ற தென்றறிந்து அதை மேற்கொண்டவரென்றும் இன்னோரன்ன பல வரலாறுகளைக் கர்ணபரம்பரை கூறுகின்றது. இவர் இல்லறம் நடத்திக் காட்டியவ ரென்பதற்கு.

> 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
> பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.'

என்னுந் திருக்குறளைக் கூறவெடுத்துக் கொண்ட படிக்காசுத் தம்பிரான்.

புல்லறிவுக் கெட்டாத தண்டலையார் வளந்தழைத்த பொன்னி நாட்டில்
சொல்லறமாதவம்புரியுஞ் சவுபரியுந் துறவறத்தைத்துறந்துமீண்டான்
நல்லறமாம்வள்ளுவர்போல்இல்வாழ்க்கைமனைவியுடன் நடத்திநின்றால்
இல்லறமே பெரிதாகும் துறவறமும் பழிப்பின்றேல் இயற்கைதானே.

என அத்திருக்குறளுக்கு திருவள்ளுவரையே யுதாரணமாகக் காட்டினமை பிரமாணமாம். நெய்தற் றொழிலை மேற்கொண்டவ ரென்பதற்கு 'பூவியையனும்' என்னுந் தனிப்பாடலும், 'சிக்கிய நூல் பிணைப்பார்' என்னும் ஞான வெட்டிச் செய்யுளும், தொன்று தொட்டு ஆடை நெய்யும் பறையர்கள் இருக்கின்றமையுமே பிரமாணமாம். அன்றி வேறு சிறந்த பிரமாணம் இன்றாவதறிக. அவர் மக்களின் பொருட்டு இல்லற வியலையும் காமத்துப் பாலையுங் கூறினாரேனும்

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

எனத்தாமே இல்லறத்தை இழித்துக் கூறியபடியாலும், 'தெய்வத்திருவள்ளுவர்' 'தேவர் திருவள்ளுவர்' 'தேவிற் சிறந்த திருவள்ளுவர்' எனவரும் பிரயோகங்களாலும், துறவியேயாவர் என அறியப்படுகிறார்.

## சமயம்.

ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொருள் எல்லாம்—உரைத்ததனால்
தாதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன

எனப் பெருஞ் சித்திரனார் ஆசிரியரை வைதிக ரென்று குறிக்கின்றார். ஆசிரியர்தாமே

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

என்று வேதத்தையும்,

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

என்று இதிகாசத்தையும்,

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.

என்று புராணத்தையும், கொள்ளுகின்றபடியால் ஆசிரியர் வைதிக மதத்தின ரென்று துணியலாம்.

# 14

## திருவள்ளுவர் கண்ட அறநெறம்:

ஆசிரியர் வைதிக குடும்பத்திற் பிறந்தவரென்றும், வைதிகமதத்திருந்து ஆராய்ந்தவரென்றும், அறிவது போல அவர் வைதிகமதத்தைக் கடைப்பிடித்து ஒழுகியவர்தானென்று சொல்வதற்கில்லை. வைதிகமதம் புலால் உண்ணுதலையும் கள்குடித்தலையும் மறுத்ததில்லை. இதனை 'முள்ளம்பன்றி, சல்லிய மிருகம், உடும்பு, காண்டாமிருகம் முயல் இவைகள் ஐந்து நகங்களை யிருந்த போதிலும் இவைகளையும், ஒருபக்கம் பல்லுள்ள மிருகங்களில் ஒட்டகம் நீங்கலாக மற்றவைகளையும் புசிக்கலாம்.' என்னும் மநுதர்மத்தின் ஐந்தாவது அத்தியாய வாக்கியமும்,

> கள்ளி யகிலும் கருங்காக்கைச் சொல்லும்போல்
> எள்ளற்க யார்வாயின் நல்லுரையைத்—தெள்ளிதின்
> ஆர்க்கும் அருவி மலைநாட நாய்கொண்டால்
> பார்ப்பாரும் தின்பர் உடும்பு. என்னும்

பழமொழிச் செய்யுளும், சுராபானத்தையும் சோமரச பானத்தையும் கூறுஞ் சாஸ்திரங்களும் விளக்கும். ஆசிரியர்,

> படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
> உடல்சுவை உண்டார் மனம்.

எனப் புலால் உண்ணுதலையும்,

> நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
> பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

எனக் கள்குடித்தலையும் கண்டிக்கிறார், நீங்கள் வைதிக மதத்தினரான பல ஆன்றோர்கள் புலால் உண்ணுதலையும் கள் குடித்தலையும் மிகுதியாகக் கண்டித்திருக்கின்றனரே அதன் காரணம் என்னவென்று கேட்கலாம். அதற்கு ஆசிரியர் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறளே முக்கிய

காரண மென்று பதிலளிப்பது சிறந்ததாம். வைதிகமதம் யாகத்தை விரும்புகிறது. ஆசிரியர்,

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

எனவும்

'நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

எனவும் வேள்வியிற் குறை கூறுகின்றார். வைதிகமதம் பிறப்பினால் ஜாதியுண்டென்று சாதிக்கின்றது. ஆசிரியர்,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

எனப்பிறப்பினால் ஜாதியுண்டென்பதை மறுக்கின்றார். இன்னும், அந்தணர் என்பதற்கு அழகிய தட்பமுடையார் எனச்சிறந்த வுரைகூறிப்பின்னர் அது ஒருஜாதியாருக்குப் பெயராயிற்று. இவ்வாறுவரும் பெயர்கட்குக் காரண இடுகுறிப் பெயராமென வுரைக்கும் ஏழைமதியினரைக் கண்டித்து, எப்பெயர் ஒருவகையாற் காரணப்பெயராயும் மற்றொரு வகையால் இடுகுறிப் பெயராயும் வழங்கப் படுகிறதோ அப்பெயரே காரண இடுகுறிப்பெயராம். காற்றாடி என்பது போல. அது, காற்றினால் ஆடுவதாற் காரணப் பெயராயும், காற்றினால் ஆடுங் கொடிமுதலிய வற்றை யொழித்துச் சிறுவர்கள் கயிற்றாற் பறக்கவிடும் விளையாட்டுக் கருவிக்கே வழங்குவதால், இடுகுறிப் பெயராயும் இருப்பது காண்கவென அறிவுறுத்தற்குச் சிறந்த பிரமாணமாக

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

என்னுந் திருக்குறளை யருளி அந்தணர் என்னும் பெயர் காரணப்பெயராம். அது அழகிய தண்ணளியுடையாரான

துறவிகட்கே யுரியதாம் எனவற்புறுத்துவதையும் நோக்குக. இத்திருக்குறட்கருத்தையும் அந்தணரென்று சொல்லிக்கொண்டு இறுமாந்திருக்கும் ஜாதியார்களின் அருளின்மையையுங் கண்டே ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'அந்தத்தை அணவுவார் அந்தணர்' என உரையிட்டனர்போலும். அந்தம என்றது வேதாந்தம்.

வைதிகமதம் சூத்திரஜாதியானுக்கு மெய்யுணர்வில் அதிகாரம் இல்லையென்கிறது. இதனை, பிரஹ்மசூத்திரத்தின் அபசூத்திராதிகரணம் விளக்கும். ஆசிரியர்,

*அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்*
*தவாஅப் பிறப்பீனும் வித்து.*

*ஆரா வியற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்.*

எனப் பொதுபடக் கூறுகின்றார். வைதிக மதம் சுருதிஸ்மிருதிகளின் எல்லாவாக்கியங்களையும் பிரமாணங்களாகக் கொள்ளும். இதனை, 'வேதத்தை சுருதி யென்றும் தரும சாஸ்திரத்தை ஸ்மிருதி யென்றும் அறியத்தக்கது. அவ்விரண்டையும் விரோதமான தர்க்கசாஸ்திர யுக்தியைக் கொண்டு ஆக்ஷேபிக்கக் கூடாது. அவற்றினாலே தருமம் விளங்குகிறதல்லவா? 'எவன் தருமத்திற்குக் காரணமான அவ்விரண்டையும் தர்க்கசாஸ்திர யுக்தியினால் அவமானஞ் செய்கிறானோ அவன் பெரியோர்களால் கர்மாநுஷ்டானத்தினின்றும் நீக்கத்தக்கவன். வேதத்தை நிந்திப்பதால் தெய்வமில்லையென்று சொல்லுபவனுமாவான்,' என்னும் மநுதர்ம சாஸ்திரம் இரண்டாவதத்தியாய வாக்கியங்கள் விளக்கும். ஆசிரியர்

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருண்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு.*

என்னுந் திருக்குறளால் அதனைக் கண்டிக்கின்றார்.

அவர்

இரந்தும் உயிர்வாழ வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

எனச் சிருஷ்டி கருத்தா வுண்டென்பதை யேற்றுக்கொள்ளுகிறபடியால் நிரீச்சுரவாதம்புரியும் சமணம் முதலிய மதங்களைக்கொண்டவருமன்று.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

என ஊழ் உண்டென்பதை யேற்றுக் கொள்ளுவதால் கிறிஸ்துவம் முதலிய மதங்களைக் கொண்டவருமன்று. இனி, ஆசிரியர் தமது நூலுக்கு மங்கலமாகக் கூறிய கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட மதவாதிகள் வணங்குங் கடவுளர்களின் திருநாமங்களி லொன்றையாவது எடுத்தாண்டனரில்லை. அம்மதவாதிகள் எடுத்தாளுந் தத்துவங்களின் தொகையையும் பெயரையுங்கூட உரைத்தனரில்லை. ஆயின் ஆசிரியரின் சமயந்தான் யாது? எனும் பேராசங்கை நிகழும். அதற்கு,

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தார் ஓர்ந்து.

எனப் பரணரும்,

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலில்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

எனத் தேனீக்குடிக் கீரனாரும்,

இன்பமும் துன்பமும் என்னும் இவையிரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனமகிழ—அன்பொழியா
துள்ளி யுணர உரைத்தாரே ஓதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

என மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனாரும்,

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கும் மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா.

எனக் கவுணியனாரும் கூறியுள்ளபடி காலத்திற்கும் தேசத்திற்கும் மக்களின் மன நிலைக்கும் ஏற்றவாறு பல மதங்களை சிருஷ்டித்து அவர்களின் உரிமைகளை அபகரிக்கும் ராஜ தந்திரம் வல்லார்களை யொவ்வாமல் நந்திருவள்ளுவனார் தமது பெருங்கருணையால் மக்களாய்ப் பிறந்தோர் யாவரும் மகிழ்ந்துக் கொண்டாடும்படி மக்களின் எண்ணங்களையெல்லாம் அறிந்து பொய்யைப்பொய்யாக்கி மெய்யை மெய்யாக்கி இன்பம் இவை எனவும் துன்பம் இவையெனவும் ஆவன இவையெனவும் ஆகாதன இவையெனவும் ஆய்ந்துணர்ந்து நம்மைப் பழமையாகத் தொடர்ந்து வரும இருவினைகளையும் போக்கும் மருந்தாகச் சிந்தைக்கும் செவிக்கும் வாய்க்கும் இனிமை தரும்படி இனிய குறள்வெண்பாவினால் மூதறம் அருளினாரென்று நாம் அறிகிறோம். இதனால் அவர் ஒப்பும் உயர்வும் அற்றதோர் புதிய சமயத்தையுண்டாக்கி அதன்வழி நடந்துக் கொண்டவரென்பது ஏற்ற சமாதானமாகும். திருவள்ளுவர் மூதறத்தின் வடிவத்தை விரித்துரைக்கவெனின் காலம் நீட்டிக்குமென் றஞ்சி விடுக்கின்றனன்.

## 19

## ஆசிரியரின் சிறப்புகள்.

'நான்முகத்தோன், தான்மறைந்துவள்ளுவனாய்' 'வள்ளுவனாகி அந்தா மரைமேலயன்' என முறையே கூறிய உக்கிரப் பெருவழுதியாரும் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனாரும் ஆசிரியரை அவதார புருஷர் என்கின்றனர். 'வாலறிவின், வள்ளுவர்' எனப் பரணர் ஆசிரியரை விளங்கிய அறிவர் என்கின்றனர். 'தானே முழுதுணர்ந்து—உரைத்தான் என நக்கீரனாரும், 'தேய்வப் புலவன் திருவள்ளுவன்' எனப் பிறரும் ஆசிரியரைப் பிறர்பால ஓதாது யாவுங் கற்றறிந்தவர், சர்வஞ்ஞர் என்கிறார். 'ஏதமில் வள்ளுவர்' எனப்பெருஞ்சித்திரனார் ஆசிரியரைக் குற்றமற்றவர் என்கிறார். 'அன்பொழியா, துள்ளி உணர உரைத்தாரே ஓதுசீர் வள்ளுவர்' என மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் மக்கண்மாட்டு நிறைந்த அன்புடையவரும் பெரும்புகழுடையவருமாமென்கிறார். 'பிணக்கிலா, வாய்மொழி வள்ளுவர்' என உருத்திர சன்ம கண்ணார் ஆசிரியரை ஜாதிசமயச சண்டையற்றவரும் சத்திய வாக்குடையவருமாமென்கிறார்.

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

என இறையனார் ஆசிரியரை வேண்டிய வேண்டியாங் களிக்கும் இயல்புடையவர் என்கிறார். குன்றாத செந்தளிர்க் கற்பகம் திருவள்ளுவருக்கும் தெய்வத் திருமலர் திருக்குறளுக்கும் உவமையாவதறிக. குன்றாத — வேண்டிய வேண்டியாங் களிக்கும் இயல்பிற் குறையாத. இன்னும் ஆசிரியரின் சிறப்புகள் பல.

# 20

## ஆசிரியர் அருளிய நூல்.

ஆசிரியர் அருளியநூல் திருக்குறள் ஒன்றேயாம். சிலர் ஞாநவெட்டி, கவைரத்திநசிந்தாமணி, பஞ்சரத்திநம முதலிய வாதவைத்திய யோக முறைகளைக் கூறும் நூல்களும,

எவ்வுயிருங் காக்கவொரு ஈசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யானொருவன் அல்லனோ—வவ்வி
அருகுவது கொண்டிங் கலைவதுதான் என்னே
வருகுவது தானே வரும்.

பூவில் அயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி அளந்தோனுந் தாம் இருக்க—நாவில்
இழைநக்கி நூனெருடும் ஏழையறி வேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து

எந்தவூர் என்றீர் இருந்தவூர் நீர்கேளீர்
அந்தவூர் செய்தி அறியீரோ—அந்தவூர்
முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாலும் பாழென் றறி.

ஜாதியிலே தொண்ணூற்றாறென் பானாஞ் ஜாதி
சமயத்தில் பதின்மூன்றாஞ் சமய மாகும்
நீதியிலே சிவனுடைய நீதி யாகும்
நிலைமையிலே வேதாந்த நிலைமை என்பார்
ஆதியிலே எங்களூர் கருவூர் ஆகும்
அந்தத்தில் போய் அடைவோம் பேரூர் தன்னில்
சோதியிலே பரஞ்சோதிக் கூட்டம் நாங்கள்
சொல்லுதற்கு எங்குலஞ்சுக் கிலங்காண் ஆண்டே.

ஜாதிகுலம் சமயம் மதம் எங்கட் கில்லை
சாத்திரமும் புராணமதம் எங்கட் கில்லை
மேதினியில் இருபிறப்பும் எங்கட் கில்லை
மேனாட்டுக் குருக்களையாம் பணிவ தில்லை

அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொல் தவிராத பாவாய்— அடிவருடிப்
பின்தூங்கி முன்எழூஉம் 'பேதையே போதியோ
என்தூங்கும் என்கண் இரா.

குறுமுநிவன் முத்தமிழும் என்குறளும் நங்கைச்
சிறுமுநிவன் வாய்மொழியின் சேய்.

என்னுந் தனிப்பாடல்களும் அருளினவர் திருக்குறள் ஆசிரியரே என்கின்றனர். ஞானவெட்டி முதலிய நூல்களும் தனிப்பாடல்களும் கருத்திலும் பாஷைநடையிலும் திருக்குறளை யொவ்வாது பிற்காலத்து வழக்கியற் சொற்களையும் வரலாறுகளையும் உரைப்பதால் திருக்குறள் ஆசிரியரான திருவள்ளுவர் வேறு, ஞானவெட்டி முதலிய நூல்களினுடையவும் தனிப்பாடல்களினுடையவும் ஆசிரியரான திருவள்ளுவர் வேறென்றறிந்துக் கொள்ளுவதே சிறந்த ஆராய்ச்சியாம். பிறந்த ஞான்றே விட்டகல நேர்ந்ததே யென வருந்துந் தாயைநோக்கி ஆசிரியர் கூறியதாகச் சொல்லும் 'எவ்வுயிருங் காக்க' என்னுஞ் செய்யுளை சிருஷ்டித்தவர் திருத்தணிகை சரவணப்பெருமாளையர் எனச்சொல்வதுண்டு. 'குறுமுநிவன் முத்தமிழ்' என்னுஞ் செய்யுளைச்சிருஷ்டித்தவர் வைணவ சமயத்தவர் போலும்.

தொண்ணூற்றொன்பானுஞ் சாதியென்றது வருணம் நான்கினும் சங்கிரம ஜாதிகள் தொண்ணூற்று நான்கினும் வேறான ஜாதியை. பதின்மூன்றுஞ் சமயம் என்றது அகச்சமயம் ஆறினும் புறச்சமயம் ஆறினும்வேறானசமயத்தை. சிவனுடைய நீதி யென்றது மநு நீதியின் வேறாய் இறைவன் தரும்நீதியை. வேதாந்தநிலைமையென்றது ஆராய்ச்சி முடிந்த விடத்தை. கருவூர் முன்னர்க் கூறப்பட்டதே. பேரூர் என்றது வீட்டை, பரஞ்சோதிக் கூட்டம் என்

றது வாலறிவனுடைய இறைவன்றன் குழந்தைகள் எனற்கு, நங்கைச்சிறு முனிவன் என்றது உடைய நங்கையாரின் திருக்குமாரரான ஸ்ரீ சடகோபரை.

## ஆசிரியர் அவதாரத்திற்குக் காரணங்கள்.

பிராமணர்களின் சூழ்ச்சியால் ஏனைய சாதியினர் வேதாதி கலைகளைக் கல்லா திருந்தமையும், பன்னூற்றுண்டுகளாகச் செந்தமிழ்ப் புலவர் பலர் சங்கமிருந் தாராய்ந்தும் வருண பேதமின்றி மக்கள் தம் வாழ் நாளை இனிதாக நடத்திக்கொண்டு உண்மைப்பொருளையறிந்து உய்வதற்கு வேண்டும் எல்லாப் பொருள்களையும் செந்தமிழிற் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எடுத்துக்கூறிய நூல் இல்லா திருந்தமையுமே ஆசிரியரின் அவதாரத்திற்குக் காரணங்களாம். இவ்வுண்மையை திருவள்ளுவரால் கடைச் சங்கம் அழிந்தது என்னுங் கர்ண பரம்பரையும்,

செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரியார் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியார் அல்லாதார் இல்.

எனவும்

இன்பம் பொருள்அறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகம்
கொள்ள மொழிந்தார் குறள்.

எனவும்

சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்
போற்றி உரைத்த பொருளெல்லாம்— தோற்றவே
முப்பால் மொழிந்த முதற்பா வலர்ஒப்பார்
எப்பா வலரினும் இல்.

எனவும் வரும் வாக்கியங்களும் பிறவும் விளக்கும்.

## நவீன புலவர்களின் கட்டுக் கதைகளும் போலி ஆராய்ச்சிகளும்.

தவமுனிவனாகிய பகவனுக்கும் கருவூர்ப்பெரும் புலைச்சியாகிய ஆதியென்பவளுக்கும் பிறந்து மயிலைப்பறையரிடத்தில் வளர்ந்தவரென்றும்

சோழ நாட்டுள் ஓர் அந்தணன் மனைவி பெற்றெடுத்த பகவன் என்னும் பிராம்மணனுக்கும் ஆதியென்னும் புலைமகளுக்கும் பிறந்து மயிலை வள்ளுவர் வளர்க்க வளர்ந்தவரென்றும்,

திருவாரூர் புலைச்சியைச் சேர்ந்து பெருஞ்சாகர முனிவன் பெற்றெடுத்த பகவன் என்னும் பிராம்மணனுக்கும் தவமுனி யென்னும் பிராம்மணன் மனைவியாகிய அருண்மங்கை யென்னும் பிராம்மண மாதினிடம் பிறந்து உறையூர் பெரும்பறையனிடத்திலும பின்னர் உறையூரையடுத்த மேலூர் அகரத்தில் நீதியையர் வீட்டிலும்வளர்ந்த ஆதியென்னும் பிராம்மண மாதுக்கும் பிறந்தவர்; இவர் தன்பெயரை * வருங்காலம் அறிந்துரைக்கும் வள்ளுவனென்று பரமசிவனாருக்கு முன் ஊழிகாலத்தில் உரைத்த பிரம்மதேவனென்றறிந்த கலைமகளால் திருவள்ளுவன் என்னும் பெயர்புனையப்பெற்று திருமயிலையில் புத்திரப் பேற்றுக்குச சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்திருந்த ஒரு வேளாளன்மனைவி பண்ணைக்காரரைக் காவல்வைத்து வளர்க்க வளர்ந்தவரென்றும் திரித்தும் பிராம்மணராக்கிப் புகழ்ந்தோரும்,

பிரமதேவன் அங்கிசத்தோனாகிய பகவன் என்னும் பிராம்மணனுக்கும் கலைமகள் அங்கிசத்தினளாகிய ஆதி

---

* நிமித்தகன்.

யென்னும் பெண்பாலுக்கும் பிறந்து ஒரு வேளாளன் வளர்க்க வளர்ந்தவர்; இவர், திருமயிலையில் ஊராரோடு சேர்ந்து வாழாமல் ஊர்ப்புறத்தே யுள்ள சேரியாரோடு சேர்ந்து வாழ்ந்ததனால் பலர் இவரை வள்ளுவன் என்றார்கள் ஆயினும் இவர் வேளாளரே யென்று வேளாளராக்கிப் போற்றினோரும்,

மன்னர்களின் புரோகிதனுக்கு வள்ளுவன் என்னும் பெயருண்டாகையாலும் திருவள்ளுவருக்கு நெடுங்காலத்திற்கு முன்னரேயே ஆரிய பிராமணர்கள் தமிழ் நாடடிற் குடியேறித் தமிழ் நாட்டு மூவேந்தரிடத்தில் புரோகித உத்தியோகத் தமர்ந்திருந்தன ராதலாலும் திருவள்ளுவர் என்னும் அவர் திருநாமத்தாலும் அவரை ஆரிய பிராமணர்களில் புரோகித ரென்று கொள்ளுதற்கிட முண்டு என்றும்,

இவர்தம் இல்வாழ்க்கைக்குத் துணையாக மார்க்கசகாயன் என்னும் வேளாளன் புதல்வியாகிய வாசுகி அம்மையாரை மணந்து இல்லறம் வழுவாது நடத்தினவராதலால் வேளாளராயிருக்கலாம் என்றும் ஐயங்கொண்டோரும்;

வள்ளுவர் என்பது பண்டைத்தமிழ்நூல்களில் நல்ல உயர்குலத்தவர்களான நிமித்தகத் தொழிலாளர் பெயராகவும் கருமத்தலைமைத் தொழிலாளர் பெயராகவும் வந்துளது; ஆதலால் அவர் நல்ல உயர் குலத்துதித்த நிமித்தகராக அல்லது கருமத்தலைவராகவே யிருக்கவேண்டும். கம்பராமாயணம் முதலிய நூல்களில் இழிகுலத்தவனான முரசறைவோனை வள்ளுவ னென்று கூறியிருப்பினும் வள்ளுவ னென்பது தொன்று தொட்டு முரசறைவோன் பெயராயிருந்த தென்று கொள்ளற்கிடமில்லை; ஆதலால், கம்பருக்கு நெடுங்காலத்திற்கு முந்திய கடைச்சங்ககாலத்

தவரும் வடமொழி நூல்களை நன்கு கற்றவருமான திருவள்ளுவரைக் குலத்தால் முரசறைவோராகிய பறையனென்பதற் சேதுவில்லை; அவர் தமிழகத்து ஓர் உயர் குலத்தவரெனக் குறிப்பில் வைத்துக் களித்தோரும்,

தமிழகத்தி லுள்ள வள்ளுவகுலத்தில் பிறந்தாயினும் வளர்ந்தாயினும் தெள்ளிய அறிவுபெற்ற இப்பெரியாரது இயற்பெயர்மங்கித் தொல்காப்பியர் சேக்கிழார் என்னும் மரபின் வழிவந்த பெயர்கள்போல குலப்பெயரே பிற்காலத்தில் விளங்கிவழங்குவதாயிற்று என்றுக் கொள்ளுவது பொருத்தமாகத் தோன்றுகிறது. இவ்வுண்மையை,

> களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
> விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
> கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரை
> தலைநிலத்து வைக்கப் படும்.

என்னும் உண்மைபற்றி யெழுந்த மாமூலனார் செய்யுள் வலியுறுத்துகின்றதெனப் பொருள்கொண்டு கடைக் குலத்தவரெனக் கூறி மகிழ்ந்தோரும்,

திருவள்ளுவரைப் பற்றி வழங்கி வருகின்ற சரித்திரங்கட் கெல்லாம் கபிலரகவல் என்னும் நூலே ஆதாரமன்றி வேறில்லை. அவ்வகவலும் சங்கத்தமிழ்ற் கபிலராக்கன்று. அவ்வகவலுள் 'அவதரித்த' 'எத்தனைபோ' 'சானார்' என்றற்றொடக்கத்துப் பிற்காலத்து வழங்கிய சொற்களுளவாதலால் திருவள்ளுவரும் ஔவைப் பிராட்டியாரும் பிறந்த குலங்களை மறைத்து அவர்களைப் பிராமணன் மக்களாக்கப் பிற்காலத்தாரொருவர் இயற்றினரென்பதுதேற்றம். அவ்வகவலுட் காணப்படும் ஔவை முதலெழுவர்கள் ஆதிப்புலைச்சிக்கும் பிராமண பகவனுக்

ளும் பிறந்தார்களென்பதும் அவர்களில் ஔவைப்பிராட்டி பாணரிடத்தில் வளர்ந்தனளென்பதும் நூல்களுட் காணப்படாவிடினும் ஔவைப் பிராட்டி பாணப்பெண்ணே யென்றும், அதுபோலவே கபிலர் பிராமணரிடத்தில் வளர்ந்தாரென்பது காணப்படா விடினும் அவர் பிராமணரே யென்றும், புறநானூற்றால்விளங்குவதுபோல திருவள்ளுவர் பறையரிடத்தில் வளர்ந்தனரென்று காணப்படா விடினும் அவர் பறையரே யென்று தந்துகாட்டத்தக்க நூலொன்று மில்லை. திருவள்ளுவ மாலையுள் மாமூலனார் இயற்றிய தெனக்காணப்படுஞ் செய்யுளில் 'மறந்தேயும், வள்ளுவ னென்பானோர் பேதை' என்னும் இசையறுப்பின் ஒலியால் திருவள்ளுவர் முரசறையுந் தொழிலுடைய வள்ளுவ குலத்திற் பிறந்தாயினும் வளர்ந்தாயினு மிருக்க வேண்டுமென்று கொள்ளுவாருளர், அது பொருந்தாது. திருவள்ளுவ மாலையில் பாயிரங் கூறியபுலவர்களனைவரும் ஏககாலத்திருந்தவரல்லர். புறநானூறு முதலான வற்றின் சார்பைக்கொண்டு ஆராயுமிடத்தில் பதின்மர் பன்னிருவர் ஏககாலத்தவராக இருத்தல் கூடுமென்பது தெளியப்படுகின்றதாகலின் மாமூலனாரியற்றியதாகக் காணப்படுஞ் செய்யுள் திருவள்ளுவர் காலத்ததென்பதில் ஐயமுண்டு எனச்சந்தேகத்தை யுண்டாக்கினோரும்.

எல்லா நூல்களிலுஞ் சிறந்ததாயொளிரும் திருக்குறளே நமக்குப் பிரமாணமாம். அன்றி, அவர் பிறந்த அல்லது வளர்ந்தகுலமாவது சமயமாவது பிரமாண மாவதில்லையென உருத்திராக்கப் பூனையைப்போன் றமர்ந்தோருமா யொழிந்தனரே! அந்தோ!! அந்தோ!!! இத்தமிழுலகியற்கை யிருந்தவாறென்னே?

பொய்யில் புலவன் பொன்னடி வாழ்க.

## அநுபந்தம்.

**வினா**— சுமார் எழுநூறு வருடங்கட்கு முற்பட்ட ஞானாமிர்தம் என்னும் சைவ நூலின்படி ஆசிரியரின் தாய் தந்தையர் ஆதப் புலைச்சியும் யாளிதத்த முனிவனுமாம் எனக் கொள்ளின் வருங் குற்றம் என்னை?

**விடை**— ஞானாமிர்தம் கூறும் எழுவர் என்னுஞ் சொல்லிற்கு அதன் உரையாசிரியர் ஔவைமுதல எழுவர் என்றது பிரமாண மின்றிய கூற்றாதலாலும் அது பண்டைத் தமிழ் நூல் அன்றாதலாலும் அவ்வரலாறு குற்ற முடையதாம்.

**வினா**— ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா பகவத் கீதையை யருளிச் செய்து ஆரிய தேசத்தை வாழ்வித்தது போல திருவள்ளுவர் திருக்குறளை அருளிச்செய்து தமிழ் நாட்டை வாழ்வித்தருளினு ரென்பது நல்கூர் வேளவியார் கருத்தெனின் வருங்குற்றம் என்னை?

**விடை**— இக்கருத்தமையக் கூறும் உரையில் உப்பக்கம் என்பதின் உகரச்சுட்டுப் பொருளும் நோக்கி என்பதின் பொருளும் சிறவாதிருத்தலும், உபகேசி என்பது நப்பின்னைப் பிராட்டியார் திருநாமம் என்பதற்கு அவ்வம்மையார் வரலாறுகூறும் ஸ்ரீமத் பாகவதம் ஆழ்வார்கள் அருளிச்செயலாகிய திராவிட வேதம் முதலிய நூல்களிற் பிரமாணமின்மையும், உத்தர மதுரை யென்பது கடைச் சங்கம்நடந்தேறிய தமிழ் நாட்டு நகரத்திற்கும் பெயராயிருத்தலின் அதனைக் கண்ணனெம் பெருமான் திருவவதரித்த ஆரிய தேசத்து நகரமாம் எனப் பொருள் கோடற்கு ஏற்ற சான்றின்மையுங் குற்றமாம்.

வினா—

வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க்
குள்படு கருமத் தலைவற் கொன்றும்.

எனப்

பிங்கலந்தையிலும் திவாகரத்திலும் காண்கிறோமாத லால் திருவள்ளுவரைக் கருமத் தலைவனாகக் கொள்ளத் தடை யென்னை?

விடை— திருவள்ளுவர் கருமத்தலைவனாக விருந்திருப்பின் அவர் பார்ப்பன சாதியாராம். ஆம் எனின், அவரைப் பார்ப்பன ரென்றுரைத்த நூலொன்றும் இல்லை யெனவும் அவருக்குப் புதுவதாகத் தாயையுந் தந்தையையுஞ் சிருட்டித்துத் தந்து பார்ப்பன சாதியாரிற் சேர்க்க வேண்டிய ஆவசியகம் ஒன்று மில்லை யெனவும் அறிக. அன்றெனின் பார்ப்பனரொழிந்த பிறர்க்கு அத்தொழில் உண்டென நூல்களிற் காணக் கிடையாமையாலும் பார்ப்பனர்க்கு அத்தொழி லுண்டெனச் சிலப்பதிகாரம் * மங்கல வாழ்த்துப் பாடலாலும் அதன் உரையாலும் வெளிப்படையாகக் காண்கிறோமதலாலும் பிறவாற்றாலும் பார்ப்பனரே அத்தொழிற்கு அதிகாரிக ளாவரென வறிக. இவற்றால் திருவள்ளுவர் கருமத்தலைவரன்றென்பது காண்க.

---

* வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை.

(இ-ள்) மதியஞ் சகடணைந்த நாளிலே பார்ப்பான் மறையிற் சோதிடாங்கத்துள் வணிகர்க்குக் கூறிய நெறியிலே சடங்கு காட்ட இவர் இங்ஙனந் தீவலஞ் செய்கின்ற இவனைக் காண்கின்றவர் கண்கள் முற்பவத்திற் செய்த தவம் யாதுகா ணென்பாராயும்.

வி௵— பார்ப்பன ரொழிந்த மக்களில் கருமத்தலைமைத் தொழில் நடாத்தி வந்த ஒரு சாதியார் உண்டெனக் கொள்ளின் வரும் இழுக்கு என்னை?

விடை—கருமமாவ தீண்டு வைதிக கருமமாம். அதனைவட நூலார் புரோஹித மென்பர் 'உள்படு கருமம்' என்ற பிங்கலந்தை யாசிரியர் கருத்தும் திவாகர ஆசிரியர் கருத்தும் இதுவே. இது வேதாதிகாரிகளான பார்ப்பன ரொழிந்த ஏனையோரால் நடைபெற்ற தெனல் அசம்பாவிதமாம். உள்படு கருமம்—வைதிக கருமம், உட்சமயம் என்பது போல.

வி௵— 'வருநிமித் தகன்பேர் சாக்கை வள்ளுவ னென்று மாகும்' என மண்டல புருடன் நிகண்டுவில் காண் கிறோ மாதலால் திருவள்ளுவரை நிமித்தகரெனக் கொள்ளத் தடையென்னை?

விடை— நிமித்தகம் என்பது சோதிடத்தின் ஓர் பகுதி யாம். அது வேதத்தின் ஆறங்கங்களி லொன்றாய் வைதிக கருமாரம்ப கால முதலியவற்றைத் தெரி விப்பதாம். ஈண்டுச் சிலப்பதிகாரம் மங்கல வாழ்த் துப் பாடலுரையை மீண்டுமொரு முறை யூன்றி நோக்குக. இக்கருத்துட் கொண்டே கருமத்தலைவற் குரிய வள்ளுவன், சாக்கை யென்னும் பெயர்களை மண்டல புருடன் நிமித்தகற் கோதினர். இதனால் திருவள்ளுவரை நிமித்தக ரல்லரெனக் கண்டு கொள்க.

வி௵— பார்ப்பனரல்லாத மக்களும் சோதிடத்தில்வல்லு நராயிருப்பதற் கேது என்னை?

விடை— அது பார்ப்பன ரிட்ட பிச்சையென* வறிக. ஐய முளதேல் 'பஞ்சாங்கப் பார்ப்பான்' 'பார்ப்பானைக் கேள்' என்னும் வழக்குகளையாவது கண்டு தெளிக.

வி|ை— மனைவியைத் துணையாகக் கொண்ட வசிஷ்டராதி முநிவர்களைப் போலத் திருவள்ளுவரும் வாசுகி யம்மையா ரென்னுந் தமது மனைவியைத் துணையாகக் கொண்ட முநிவர் எனின் வரும் ஐயம் என்னை?

விடை—வள்ளுவன் என்னுங் குலங்கருதிய திருவள்ளுவர் என்னும்பெயர் காரணக்குறி யாக்க வியற்பெயராக விருக்க அதனை மறைத்து மக்கட் கிட்டிருக்கும் இராமன, கிருஷ்ணன் என்பவற்றைப்போன்ற இடுகுறியாக்க வியற்பெயராகக் கொண்டு அதற்கு * ஏக நக்ஷத்திர விவாகப் பொருத்தமமைந்த வாசுகி யென்னும் பெயர்மாத்திரமான பெண்ணொரு சிருஷ்டித்து மனைவியாகத் தந்து ஆசிரியரை வேளாளராக்கப் புகுந்தார் கூற்றுமென யூகிக்க விடந்தருவதே ஐயமாம்.

விறு— வள்ளுவர்கள் முரசறைபவர்கள் என்பதற்கு நூற் பிரமாண முண்டா?

விடை— உண்டு.

சிறைவிடுமின் சிறைக்களமுஞ் சீத்திடுமின் ஏழாண்டு
 தேயத் திட்டும்
இறைவிடுமின் அயல்வேந்தர் திறைவிடுமின் நிறைநிதியம்
 ஈட்டும் ஆயத்
துறைவிடுமின் ஆலயமும் அறப்புறமும் பெருக்குமெனத்
 தொழாரைக் காய்ந்த
கறைவிடுமின் அயில்வேலான் வள்ளுவனை நீ கூய்முரசங்
 கறங்கச சாற்றி [திருவிளையாடல்]

வானையுந் திசையையும் கடந்த வான்புகழ்
கோனையின் றெதிர்கொள்வான் கோல மாநகர்
தானையும் அரசரும் எழுகத் தானென
யானையின் வள்ளுவன் முரசம் எற்றினன் [இராமாயணம்]

---

* ஓ, வ, வீ, வு என்பன உரோகிணி நக்ஷத்திர நாம எழுத்துக்கள் எனவும் உரோகிணி, திருவாதிரை, பூசம், மகம், அஸ்வினி, திருவோணம் என்னும்நக்ஷத்திரங்கள் மணமக்கட் கொன்றுயின் ஏகநக்ஷத்திரப் பொருத்த மெனவும் அறிந்து வள்ளுவர், வாசுகி யென்னும் பெயர்கட்கு ஏகநக்ஷத்திரப் பொருத்தங் கண்டு கொள்க.

கடியயர்மண் டபமிருமித் திடுதியெனக் கடவுளர்தச்
சனைக்கூஉ யேவி
கொடிதுவன்று நகரறியக் குணின்முரசி னெருக்கிமணங்
கூறு கென்றுத்
தொடிபொலிந்த மணித்தடக்கை வள்ளுவனை வியவரிறுற்
றாண்டி விண்ணோர்
முடிதுளக்க அவரவர்க்குத் தக்கபணி விடைமுறையி
னிறுவி னுனல் [தணிகைப் புராணம்]

வினு— வள்ளுவர் முரசறைபவர்கள் என்பதற்குப் பண்டைத் தமிழ்நூற் பிரமாண முண்டா?

விடை— உண்டு.

கள்ளத்தா னம்மைக் கொல்லக் கருதினு னுமுந் தன்னை
கள்ளத்தா லுயிரை யுண்ணக் கருதினே மிதனை யாரும்
உள்ளத்தா லுமிழ வேண்டா வுறுபடை வந்து கூட
வள்ளுவார் முரச மூதா ரறைகென வருளி னுனே [சீவகசிந்தாமணி]

வினு— ஐதிகத்தால் ஆசிரியரின் திருமுடியில் சிவலிங்கமிருக்கக் காண்கிறோ மாதலால் ஆசிரியர் வீரசைவ சமயத்தைச் சார்ந்தவரெனக் கொண்டால் வரும் இழுக்கு என்னை?

விடை— ஆசிரியர் காலத்தில் தமிழ் நாட்டில் வீரசைவ சமயம் பரவி யிருந்த தென்பதற்குச் சான்றேது மில்லாமையால் அவரை வீரசைவரெனக் கோடல் பொருத்த மற்றதாம்.

வினு— திருவள்ளுவருக்கு நாயனுர் என்னும் பட்டப் பெயர் உண்டா?

விடை— சுமார் இருநூற்றைம்பது வருடங்கட்கு முன் ஆதி திராவிடர்களாகிய வள்ளுவர்களில் வீரசைவ சமயத்தைச் சேர்ந்துப் பண்டாரங்களான சிறு கூட்டத்தாரால் சமய தீக்கை பெறுமுன் திருவள்ளுவருக்கு நாயனுர் என்னும் பட்டப்பெயரே கிடையாதென வறிக.

வினா—

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று,

என்னுந் திருக்குறளில் இன் உருபு உவமப் பொரு ளின் கண் வந்த ஐந்தாம் வேற்றுமையாதலால் யாக கருமம் நன்றாதல போல ஒன்றன் உயிர் செகுத் துண்ணாமையும் நன்று என்னும் பொருள் கொள்ளு வதை யொழித்து ஆசிரியர் யாக கருமத்தில் குறை கூறுகின்றா ரென்ப தென்னே?

விடை—

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

என்னுந் திருக்குறளில யாக கருமத்தில் குறை கூறு கின்ற படியால் 'அவிசொரிந்து' என்னுந் திருக்குறளின் இன் உருபு உறழ்ச்சிப் பொருளின்கண் வந்த ஐந்தாம் வேறறுமையாம் அது ஆயிரம் யாககருமத் தினுஞ் சிறந்தது ஒன்றன் உயிர்செகுத்துண்ணாமை யென்னும் பொருள்தருவதாம். ஆதலால், ஆசிரியர் யாககருமத்தில் குறைகூறுகின்றார் என்பதில் இழுக் கொன்றுமில்லை.

வினா— அத்வைதம, துவைதம், விசிஷ்டாத்வைதம் என் னும் பக்ஷங்களில் ஆசிரியர் பற்றிய பக்ஷம் யாது?

விடை— அத்வைத பக்ஷமே ஆசிரியர் பற்றிய பக்ஷமாம் ஆனால், அவர் வைதிக தாந்திரிக சமயஙகளில எச் சமயத்தையும் பற்றினவரல்ல ரென்பது அறியத்தக் கது.

வினா— மூதறமாவ தியாது?

விடை— மூதறமாவது அறிவும் அமைதியும் பற்றின்மை உள்ளபோது தோன்றுவதாய் பழமை யானதாய் ஒன்றாய் ஒரேதன்மையையுடைய அறமாம் இதுவே காலத்திற்கும் தேசத்திற்கும் ஏற்ற வாறு அன்பே முதலாக் அவ்வாவறுத்தலே இறுதியாகப் பல வேறு வடிவங்களைப் பெற்று விளங்குவதாம்.